விநாயகர் பதின்ம மேல்நிலைப்பள்ளி, சிவகாசி

வகுப்பு : 12 பாடம் : தமிழ்

DATE: 09 – August – 2021 T – 26 No. of Pages: 05

# மொழியை ஆள்வோம்

**சான்றோர் சித்திரம் :**

**மறைமலையடிகள்**



**(1876 - 1950)**

சென்னை கிறித்துவக் கல்லூரியில் தமிழாசிரியர் பணிக்கு நேர்காணலுக்குச் சென்றார் ஒருவர். அந்தக் கல்லூரியின் பேராசிரியர் பரிதிமாற்கலைஞர், "குற்றியலுகரத்திற்கு எடுத்துக்காட்டுச் சொல்லுங்கள்" என்று கேட்டார். அவர் "அஃது எனக்குத் தெரியாது" என்று பதிலளித்தார். நீங்கள் தேர்வு செய்யப்பட்டுவிட்டீர்கள் என்றார் பரிதிமாற்கலைஞர். 'தெரியாது' என்று சொன்னவரை எப்படித் தேர்வு செய்யலாம் என்று பிறர் கேட்டபோது, 'அஃது' என்பது ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம் 'எனக்கு' என்பது வன்தொடர்க் குற்றியலுகரம் 'தெரியாது' என்பது உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் என்று விளக்கினார் பரிதிமாற்கலைஞர். இந்நிகழ்வில் பரிதிமாற்கலைஞரையே வியக்க வைத்தவர் மறைமலையடிகள்.

பரிதிமாற் கலைஞருடனான நட்பு 'தனித்தமிழ்' மீதான அடிகளாரின் பற்றை மிகுதி ஆக்கியது. பிறமொழிக் கலப்பு இன்றி இனிய, எளிய தமிழ்ச் சொற்களைக் கொண்டே பேசவும், எழுதவும் இயலும் என்று நடைமுறைப்படுத்தினார். 'சுவாமி வேதாசலம்' எனும் தன்பெயரை மறைமலையடிகள் என மாற்றிக் கொண்டதோடு தம் மக்களின் பெயரையும் தூய தமிழ்ப்பெயர்களாக மாற்றினார். இளம் வயதில் பல்வேறு இதழ்களில் கட்டுரைகள் எழுதிவந்த அடிகளார் ஞானசாகரம் (1902), Oriental Mystic Myna (1908), Ocean of Wisdom (1935)முதலான இதழ்களை நடத்திச் சிறந்த இதழாளராகத் திகழ்ந்தார். முல்லைப்பாட்டு ஆராய்ச்சியுரை, பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை, சாகுந்தல நாடகம் ,மாணிக்கவாசகர் வரலாறும் காலமும் முதலான பல நூல்களை எழுதியுள்ளார். முறையான பள்ளிக் கல்வியை முடித்திராத

மறைமலைஅடிகள் ஆக்கிய நூல்களும், ஆற்றிய சொற்பொழிவுகளும் அவர் ஓர் அறிவுக்கடல் என்பதை நமக்கு உணர்த்தும்.

தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.

1. நம் மானிலம் இந்த ஆண்டு வரட்சியால் பாதிக்கப்பட்டது.

நம் மாநிலம் இந்த ஆண்டு வறட்சியால் பாதிக்கப்பட்டது.

2. எங்கள் ஊரில் நூலகக் கட்டிடம் கட்ட அறசு நிதி ஒதுக்கியது.

எங்கள் ஊரில் நூலகக் கட்டடம் கட்ட அரசு நிதி ஒதுக்கியது.

3. ரங்கன் வெங்கலப் பாத்திரக்கடை வைத்திருக்கிறார்.

ரங்கன் வெண்கலப் பாத்திரக்கடை வைத்திருக்கிறார்.

4. மானம் பார்த்தபூமியில் பயிறு வகைகள் பயிரிடப்படுகின்றன.

வானம் பார்த்த பூமியில் பயறு வகைகள் பயிரிடப்படுகின்றன.

5. ஐப்பசி அடைமழையில் ஊருனி நிறைந்தது.

ஐப்பசி அடைமழையில் ஊருணி நிறைந்தது.

6. இன்னிக்கு சாயங்காலம் கபடி போட்டி நடைபெறும்.

இன்றைக்கு சாயுங்காலம் கபடி போட்டி நடைபெறும்.

**தமிழாக்கம் தருக** :

The serious dearth of library facilities in this country is scarcely keeping with India's status in the international community of nations or with her educational and social needs. In this matter. India compares unfavourably not only with other independent Dominions of the common wealth but even with certain British colonies. She possess only one public library on any considerable size, and even this institution is inadequate to serve the need

of the capital city. Only a few towns can boasts of possessing any library at all. The rural population is completely neglected; There are no travelling libraries to reach them of kind that are to be found even in some backward countries.

The growth of libraries has lagged. Far behind the increase in the number of schools and the rise in the rate of literacy. The great mass of the people in India do not have the means to buy books or even magazines and newspapers; in the absence of sufficient public libraries and reading room, most of them cannot attain regular reading habit.

நமது நாட்டில் கவனிக்கப்படவேண்டிய நூலகத்தின் பற்றாக்குறையானது அதன் உலகநாடுகள் அளவிலான கல்வி மற்றும் சமூகத் தேவைக்கு ஏற்ப அமையவில்லை. இந்த விஷயத்தில் இந்தியாவானது, காமன் வெல்த்தின் சுயேட்சை நாடுகளுடன் மட்டுமல்லாது ஆங்கில காலனிய நாடுகளுடனும் சாதகமற்ற முறையில் ஒப்பிடப்படுகிறது. இந்தியாவிடம் குறிப்பிடத்தக்க அளவில் ஒரே ஒரு பொது நூலகம் மட்டுமே உள்ளது. அது கூட தலைநகரத்தின் தேவையைப் பூர்த்தி செய்ய போதுமானதாக இல்லை. சில நகரங்கள் மட்டுமே ஏதாவது நூலகத்தைக் கொண்டிருப்பதாகப் பெருமிதம் கொள்ள முடியும். கிராமத்து மக்கள் முற்றிலுமாகப் புறக்கணிக்கப்படுகின்றனர். அவர்களை அடைய சில பின்தங்கிய நாடுகளில் இருப்பதைப் போன்ற நடமாடும் நூலகங்கள் கூட இல்லை.

நூலகங்களின் வளர்ச்சி பின்னடைவாக உள்ளது. பள்ளிகளின் எண்ணிக்கையின் கூடுதல் மற்றும் கல்வி அறிவின் வளர்ச்சி ஆகியவற்றில் இது மிகவும் பின்தங்கியுள்ளது. இந்திய நாட்டின் பெரும்பாலான மக்கள் புத்தகங்களோ பத்திரிகையோ, நாளிதழ்களோ வாங்குவதற்குரிய வசதியற்றவர்களாக உள்ளனர். தேவையான அளவிற்கு பொது நூலகங்களும் படிக்கும் அறைகளும் இல்லாத போது அவர்களால் முறையான படிக்கும் பழக்கத்தைப் பெற முடியாது.

**பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வோடு பொருத்தி எழுதுக :**

**யானைக்கும் அடி சறுக்கும்**

**பழமொழி விளக்கம் :**

உயரத்திலும், உடல் வலிமையிலும் மிக்க யானையாக இருந்தாலும் அதற்கும் பாதங்கள் சறுக்கி விழ நேரிடும்.

**வாழ்க்கை நிகழ்வு :**

நான் கோவில்பாளையம் அரசு மேல்நிலைப் பள்ளியில் ஆறாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை படித்தவள். எல்லாத் தேர்வுகளிலும் முதல் இடம் பெற்றவள். பத்தாம் வகுப்பு முடிந்து பதினொன்றாம் வகுப்பிற்கு பொள்ளாச்சி நகரமன்ற பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் சேர்ந்தேன். மூன்றாமிடம் பெற்று அவமானமாகப் போய்விட்டது. கவலையுடன் வீட்டிற்கு வந்தேன். அப்பா என் முகத்தைப் பார்த்து உணர்ந்து கொண்டார். என்ன நடந்தது? என்றார். நான் நடந்ததைச் சொன்னேன். கண்ணு! இதற்காகவா வருந்துகிறாய்? யானைக்கும் அடி சறுக்கும் என்பது உண்மையல்லவா? வருந்தாதே.

வீழ்வது வீழ்ச்சியல்ல. வீழ்ந்தே கிடப்பதுதான் வீழ்ச்சி. அடுத்த தேர்வில் இதை ஈடு செய்து கொள்ளலாம் என்றார். என் மனம் அமைதி கொண்டது. அடுத்த தேர்வில் நான் மீண்டும் முதலிடத்தில் வந்தேன்.

**சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க :**

**பலகை**

பலகையால் ஆன மேசையில் உணவு உண்டனர்.

பல கைகள் ஒன்றிணைந்து வெற்றியைத் தமதாக்கின.

**தாமரை**

தாமரை மலர்கள் குளத்தில் அழகாகப் பூத்திருந்தன.

தா மரை (தாவுகின்ற மான்) புலியைக் கண்டு அஞ்சி ஓடியது.

VMHSS

**கோவில்**

தஞ்சைக் கோவில் கட்டடக்கலைக்குச் சிறந்த சான்றாக அமைகிறது.

கோ வில் (அரசனில்) சிறந்த அரசன் இராஜராஜ சோழன்.

**வெங்காயம்**

வெங்காயம் விலை சற்றே கூடுதலாக விற்றது.

வெம்காயம் பெற்ற வீரர்கள் பாசறையில் தங்கினர்.

**தலைமை**

தலைமை என்பது சிறந்த ஆளுமைப் பண்பாகும்.

தலை மை பூசுவது உடலுக்குத் தீங்கானது.

**கலைச்சொற்கள் :**

| | | |
|---|---|---|
| Arrival | - | வருகை |
| Departure | - | புறப்பாடு |
| Conveyor Belt | - | ஊர்திப் பட்டை |
| Take off | - | வானூர்தி கிளம்புதல் |
| Pass port | - | கடவுச்சீட்டு |
| Visa | - | நுழைவு இசைவு |
| Domestic Flight | - | உள்நாட்டு வானூர்தி |

VMHSSS